

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025), சென்னையில் உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய தனது சம்பந்தியும், சபரீசன் அவர்களின் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, மா.சுப்பிர மணியன், பி.கே. சேகர்பாபு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மருத்துவர் நா. எழிலன், அரவிந்த் ரமேஷ் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) சென்னையில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்திய தனது மைத்துனர் வே.சபரீசன் அவர்களின் தந்தையார் வேதமூர்த்தி அவர்களின் திருவுடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

### திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த பச்ச குப்பம் பாலாற்றில்

# ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலம்!

## அமைச்சர் எ.வ. வேலு திறந்து வைத்தார்!

திருப்பத்தூர், செப்.13 –

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே பச்ச குப்பம் பாலாற்றில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலத்தை பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை சார்பில் 2022–23நபார்டு கடன்உதவி திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த பச்ச குப்பம் மற்றும் அழிஞ்சி குப்பம் பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுமான பணிகள் கடந்த 2023 ஆம் ஆண்டு துவங்கியது. ரூ.22 கோடி மதிப்பீட்டில் 275 மீட்டர் நீளம் 7.50 மீட்டர் ஓடுதள அகலம். 11 உயர்மட்ட தூண்கள் 11 மேல் தள கண்களுடன் கட்டப்பட்ட பாலத்தின் திறப்பு விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சிவ.சங்கரவல்லி தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம்.கதிர் ஆனந்த், அண்ணாதுரை முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உயர்மட்ட மேம்பாலத்தை திறந்து வைத்து பேசினார்.

அமைச்சர் எ.வ.வேலு அப்போது பேசியதாவது:–

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் எலோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று செயல்பட்டு வருகிறார்.

அவரது ஆட்சியில் எண்ணற்ற பாலங்கள் கட்டப்பட்டு வருகிறது .அந்த வகையில் பச்ச குப்பம் அழிஞ்சி குப்பம் கிராமங்களை இணைக்கும் பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்ட வேண்டும் என ஆம்பூர் எம்.எல்.ஏ.வில்வ.நாதன் கோரிக்கை விடுத்தார். பெருவெள்ளம் பாய்ந்து வரும்போது நேரடியாக ஆய்வு செய்தேன் தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று ரூ.22 கோடியில் உயர்மட்ட பாலம் கட்ட நிதி ஒதுக்கப் பட்டது.

இந்த பாலம் கட்டுவதன் மூலமாக மேல் பட்டி ஆம்பூர் நரியம்பட்டு ,ராஜ கல்லு பச்சைகுப்பம் அழிஞ்சி குப்பம், கூத்தாண்டவர் நகர், வசந்தபுரம் பகுதிகளை சேர்ந்த இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன் பெறுவார்கள். ஆம்பூர் பொறுத்தவரை நான்கு ஆண்டு ஆட்சிக்காலத்தில் ரூ.88 கோடி மதிப்பீட்டில் 5 கிலோ மீட்டர் சாலை நிறைவு செய்யப்பட்டுள்ளது. எட்டு கோடி மதிப்பில் 7 கிலோமீட்டர் நிலத்திற்கு ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகளை மாவட்ட சாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ரூ.29 கோடி மதிப்பீட்டில் 5 தரைப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 12 கிலோ மீட்டர் சாலை அகலப்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது மேலும் ரூ.79 கோடி மதிப்பீட்டில் ஆம்பூர் ரெட்டி தோப்பு ரயில்வே மேம்பாலத்தை கட்டுவது என தமிழ்நாடு அரசின் சார்பாக முடிவு செய்யப் பட்டு ஒப்புதலுக்காக சென்றுள்ளது. கோப்பு கையொப்பம் ஆனவுடன் இந்த மாதம் அல்லது அடுத்த மாதம் ஒப்பந்தம் கோரப் பட்டு ரெட்டித்தோப்பு பாலத்தின் பணியை தொடங்குவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.212 கோடி வங்கிக் கடன், வருவாய்துறை சார்பில் 100 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் மற்றும் பிறசான்றிதழ் களை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. திருப்பத்தூர் திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த பச்ச குப்பம் பாலாற்றில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்.

அ.நல்ல தம்பி ,அ.செ.வில்வ நாதன், அமுலு விஜயன் என். ஆர்.கே.சூரியகுமார், ப.ச.சுரேஷ் குமார் மற்றும் மாதனூர் ராமமூர்த்தி சீனிவாசன் ஏஜாஸ் அகமது, எம்.ஆர்.ஆறுமுகம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# மிசா காந்தல் இராசு துணைவியார் தவமணி அம்மாள் மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ – கழகத்தினர் அஞ்சலி!

*நீலகிரி, செப். 13-*

*நீலகிரி மாவட்ட திமுக முன்னாள் செயலாளர் - மறைந்த மிசா.காந்தல் இராசு அவர்களின் துணைவியாரும், தலைமை கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.இளங்கோவன் மற்றும் மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆர்.வெங்கடேஷ் ஆகியோரது தாயாருமான திருமதி.தவமணி அம்மாள் (வயது 87) அவர்கள் 11.9.2025) அன்று இரவு இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க பெரிதும் வருந்து கிறோம்.*

*தகவல் அறிந்து மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ உள்ளிட்ட கழகத்தினர் ஏராள மானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று (12.9.2025) மாலை நடைபெற்றன.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேனா (எ) இரா. இலக்குமணன்
### செப்டம்பர் 13 (1998)



**கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.**

**திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.**


**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பேறறிஞர் அண்ணா 117வது பிறந்த நாள்! சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கின்றார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 117வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2025 அன்று காலை 9.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் – இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு,**
செயலாளர்,
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

நாள் : 12.09.2025.

### கரூரில் தி.மு.க. கழக முப்பெரும் விழாவில்

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டும்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

செஞ்சி, செப். 13 –

கரூரில் நடைபெறும் கழகபவள விழா மற்றும் முப்பெரும் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் பெரும் அளவில் பங்கேற்றிட வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் கூறுகையில்.

.தந்தை பெரியாரின் இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சென்று ஜனநாயக முறையில் அவற்றை நடைமுறைப்படுத்தி தனி இயக்கம் கண்டவர் பேரறிஞர் அண்ணா. அந்த இலட்சியங்களை நிறைவேற்ற அண்ணாவுக்கு துணையாகவும், அண்ணாவிற்கு பிறகு கழகத்தின் தலைவராகவும்



இருந்து நிறைவேற்றியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தொடர்ச்சியாக உடன்பிறப்புகளின் பேராதரவுடன் கழகத் தலைவர்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்கழக பயணம் தொடர்கிறது.

அந்த வகையில் கழகத்தின் சார்பில் கரூரில் வரும் 17.9.2025 புதன்கிழமை அன்றுகழகத்தின் பவள விழா, பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, தந்தை பெரியாரின் பிறந்த நாள், விழா மற்றும் கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள், என முப்பெரும் விழா மற்றும் பல்வேறு விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த முப்பெரும் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் எனவும்,

**அண்ணா பிறந்த நாள் உறுதி மொழி!**

மேலும் 15.9.2025 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அனைத்து அணி நிர்வாகிகள், தங்கள் பகுதியில் பேரறிஞர் அண்ணாவின் திருஉருவப்படத்திற்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும், நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடவேண்டும் எனவும் குறிப்பாக எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெறுவதற்கு உரிய வாக்குச் சாவடிகள் முன்பு தி.மு.க. நிர்வாகிகள் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# மிசா காந்தல் இராசு துணைவியார் தவமணி அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 13-

நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் – மறைந்த மிசா. காந்தல் இராசு அவர்களின் துணைவியார் தவமணி அம்மாள் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர் - மறைந்த மிசா.காந்தல் இராசு அவர்களின் துணைவியாரும், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.இளங்கோவன் மற்றும் மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆர்.வெங்கடேஷ் ஆகியோரது தாயாருமான திருமதி. தவமணி அம்மாள் (வயது 87) அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

அன்னாரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தாருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் வடக்கு ஒன்றியம், தொட்டியம் ஊராட்சியில் கழகத்தின் உயிர் மூச்சான கிளைக் கழகம் சார்பில், கிளைக் கழகச் செயலாளர், ஒன்றியக் கழக துணைச் செயலாளர் ராஜேந்திரன் தலைமையில், பிரதிநிதி வாசு, விஜயன் ஆகியோரின் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது, இக்கூட்டத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழு துணைத் தலைவர் அ.வெ.அன்புமணிமாறன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வருகின்றன 2026 சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் சம்பந்தமாக பல்வேறு ஆலோசனை களை நிர்வாகிகளுக்கு வழங்கினார், இதில் சின்ன சேலம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.